**கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் -2014**

கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவருக்கும் இடையேயான 2010 மார்ச் 26 ஆந் திகதிய எஸ்எல் - பீ97 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையினது III ஆம் உறுப்புரையின் 4.7 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பிரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளிப்பு, மற்றும் செயற்திட்டக் காலம்**

கிழக்கு மாகாண கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர் நிதி அமைச்சு ஆகும். கிழக்கு மாகாண சபை அமுலாக்கல் முகவர் ஆகும். பொருளாதார நடவடிக்கைகளிலும் சந்தை வசதிகளிலும் நுழைவதை முன்னேற்றுவதுடன் கிராமிய வீதிகளைப் புனரமைத்து சமூக சேவைகளில் ஈடுபடுவதை முன்னேற்றி அதன் வாயிலாக உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கு உதவியளித்து பிராந்திய சமச்சீரின்மையைக் குறைத்து கிழக்கு மாகாண மக்களின் சிவனோபாயத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் 5,834 மிலலியனுக்கு நிகரான 4,664 மில்லியன் ஜப்பானிய யென் ஆகும். இதில் ரூபா 4,944 மில்லியனுக்கு நிகரான 3,965 மில்லியன் ஜப்பானிய யென் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவரால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பட்டுள்ளது. 2010 மார்ச் 26 அன்று தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டம் 2014 ஜனவரி மாதமளவில் அதனை முடிவுறுத்தவிருந்தது. எவ்வாறாயினும், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்

கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபாரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிசார்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களை தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

மீளாய்வாண்டின்போது கடனளிக்கும் முகவருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட வட்டியாகிய 7,008,734 ஜப்பானிய யென் மற்றும் கடப்பாடு கட்டணமாகிய 196,032 ஜப்பானிய யென் என்பன கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் 2 ஆம் நிரலினது 1 ஆம் பிரிவின் பிரகாரம், கடன் தொகையிலிருந்து உள்ளூர் வரிகளுக்கும் தீர்வைகளுக்கும் நிதியளிக்கப்பட முடியாது. எவ்வாறாயினும், நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதியத் தீர்வையாகிய ரூபா 6.06 மில்லியன் கடன் தொகையிலிருந்து மீளளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 6.46 மில்லியன் பெறுமதிய நிலையான சொத்துக்கள் தொடர்பாக பொருட் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத்திட்ட நிதி ஏற்பாடு, மற்றும் மீளாய்வாண்டினுள் மற்றும் 2014 திசெம்பர் 31 வரையிலான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியேற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜப்பானிய யென் (மில்லியன் | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ஜப்பானிய யென் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ஜப்பானி யென் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| ஐசஒமு | 3,965 | 4,944 | 575 | 448 | 570 | 3,865 | 5,600 |
| இலங்கை அரசாங்கம் | 699 | 890 | 304 | 186 | 232 | 577 | 836 |
| உப மொத்தம் | 4,664 | 5,834 | 879 | 634 | 802 | 4,442 | 6,436 |

### 3.2 பௌதிக முன்னேற்றம்

செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டக் காலப்பகுதியின் போது திருகோணமலை மாவட்டத்தில் 109 கிலோ மீட்டர் தூர 97 கிராமிய வீதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 134 கிலோ மீட்டர் தூர 161 கிராமிய வீதிகளும் அம்பாறை மாவட்டத்தில் 116 கிலோ மீட்டர் தூர 71 கிராமிய வீதிகளும் கொங்கிரீட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினது ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் திருகோணமலை மாவட்டத்தில் 110 கிலோ மீட்டர் தூர 91 கிராமிய வீதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 117 கிலோ மீட்டர் தூர 150 கிராமிய வீதிகளும் அம்பாறை மாவட்டத்தில் 116 கிலோ மீட்டர் தூர 64 கிராமிய வீதிகளும் மீள புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

மாகாண சபையினது நடைமுறைகள் அபிவிருத்தியற்று இருந்தமை காரணமாக செயற்திட்டம் மீள் நிர்மாணித்த வீதிகளது ஒப்பந்த நிர்வாகமும் தர முகாமைத்துவமும் கிழக்கு மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை மற்றும் பின் தொடர் நடவடிக்கைகள் என்பனவும் போதியனவாக அமையாதது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, தகைமையற்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டமை, மீள நிர்மாணிக்கப்பட்ட மீதிகளில் தரமின்மை போன்ற பல்வேறு குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எத்தாபெந்திவெவ மத்திய வீதியைப் புனரமைப்பதற்குப் பயன்படுத்திய மூலப்பொருட்களின் அழுத்தம், கொங்கீரீட் கலவை, தரம் என்பவற்றிக்கு தரம் பரீசீலனை மேற்கொள்ளப்படாது போனமை

கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட தளப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. தேசிய கட்டிட ஆராய்ச்சி ஸ்தாபனத்தினது அறிக்கைகளின் பிரகாரம் கொங்கீரீட் கலவை சரிவரத் தயாரிக்கப்படாமையாலும் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தரமற்றனவாக இருந்ததாலும் 0+100 மீட்டர் தொடக்கம் 0+310 மீட்டர் வரையான வீதிக்குக் கொங்கிரீட இடல் திருப்திகரமாகச் செய்யப்படவில்லை. எவ்வாறெனினும் 100 மில்லி மீட்டர் கனமுடைய கொங்கீரீட்டை அவற்றின் மேல் பதிப்பதன் மூலம் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு வீதியின் 0+000 மீட்டர் தொடக்கம் 0+700 மீட்டர் வரையான இடத்தில் கொங்ரீட் தளத்தின் மீது தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டலின் 5.4.4 ஆம் பிரிவின்படி, ஒப்பந்தக்காரருக்கு 90 சதவீத கொடுப்பனவையும் வழங்குவதற்கு முன்னரே முற்பணக் கொடுப்பனவுகள் கழித்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், திருகோணமலை மாவட்டத்தின் எத்தாபெந்திவெவ மற்றும் ரொட்டாவெவ வீதிகளின் முதலாவது ஒழுங்கையை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணக் கொடுப்பனவின் 38 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 1.27 மில்லியன் மாத்திரமே ஒப்பந்தக்காரர்களுக்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கழித்துக்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்டப் பணிப்பாளரின் கூற்றுக்களுக்கமைய, முற்பணங்களின் நிலுவை மீதிகள் பின்னர் அறவிடப்பட்டிருந்தன.

(இ) மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்குப் பிரதேசச் செயலாளர் பிரிவின் 4.06 கிலோ மீட்டர் நீளமான 10 கிராமிய வீதிகளைப் புனரமைப்பதற்காக கிடைக்கப்பெற்ற 5 கூறுவிலைகளில் அதி குறைந்த விலை குறிக்கப்பட்ட ரூபா 54.9 மில்லியன் கூறுவிலையே தெரிவாகியிருந்தது. எவ்வாறாயினும், அதனையடுத்து கூறுவிலைகளில் குறிப்பிடப்பட்டிருந்த வேலைகளுக்கான தொகை இரு தடவைகள் மாற்றஞ் செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வில் புலனாகியது. இதன் விளைவாக, தொழில் நுட்பக் குழுவினதும் கொள்வனவுக் குழுவினதும் சிபார்சுடனும் அங்கீகாரத்துடனும் முன்வைக்கப்பட்ட குறைந்த கூறு விலையானது ரூபா 91.5 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், 2006 ஆம் ஆண்டின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 6.3.1 ஆம் பிரிவின் தேவையின் பிரகாரம் கூறுவிலைக்கான ஆவணங்களின் பிரதிகளை முத்திரையிடப்பட்ட உறையில் கூறுவிலையாளர் சமர்ப்பிக்காது போனமையும் கணக்காய்வுப் பரிசோதனைகளில் புலனாகியது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒன்பது ஒப்பந்தங்களில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ரூபா 54.63 மில்லியன் கூட்டுத் தொகையுடைய முற்பணத்திற்கு உத்தரவாதப் பிணை முறிகளை ஏற்பாடு செய்யுமாறு செயற்திட்டம் விடுத்த வேண்டுகோள் வணிக வங்கியினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறான பிணைமுறிகள் உண்மையற்றன என்றும் அவை குறித்த வணிக வங்கிகளால் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டம் வழங்கிய 9 ஒப்பந்தங்களுக்கான ரூபா 30.79 மில்லியன் பெறுமதியுடைய செயலாற்றல் பிணை முறிகளது செல்லுபடிக் காலம் 2014 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்தது. செல்லுபடிக் காலத்தை நீடிக்குமாறு செயற்திட்டம் விடுத்த வேண்டுகோள் ஆவணங்களின் சந்தேகத்துக்கு உரிய தன்மை காரணமாக வணிக வங்கிகளால் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டிருந்தது.
எவ்வாறாயினும், தனியார் துறைக் காப்புறுதிக் கம்பனி ஒன்று வழங்கிய புதிய செயலாற்றல் பிணைமுறிகளைச் செயற்திட்டம் ஏற்றுக் கொண்டிருந்தது. இதன்போது, தவறான வியாக்கியானங்களை வழங்கியமைக்காக காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து செயலாற்றல் பிணை முறிகளைப் பெற்றுக்கொள்வதைத் தடை செய்யும் ஏற்றுக்கொள்ளல் கடிதத்தில் உள்ள பிரிவுகளுக்கு முரணாகவும்

நடந்து கொண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 7.8 ஆம் பிரிவின் பிரகாரம் கூறுவிலை ஆவணங்களின் கூறு விலையாளர் கையொப்பமிடவில்லையாயின் அவற்றை நிராகரிப்பதுடன் மேலும் அவற்றைக் கருத்திற் கொள்ளவும் கூடாது. எவ்வாறாயினும், கூறுவிலை ஆவணங்களில் கையெழுத்திடாத 3 ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் ரூபா 316 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்திலான வீதிப் புனரமைப்பு வேலைகள் செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்தது.

### 3.5 செயற்திட்டத்தை கலைப்பதற்கான கணக்குகளை தயாரித்தல்

---

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு சொத்துக்கள் அமுலாக்கல் முகவரிடம் கையளிக்கப்பட்டிருந்தபோதும், கலைத்தல் பணிகளுக்கான செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.